**தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கொழும்பு மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 12 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கொழும்பு மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.17 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.3 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.6 |
| | | 3. | கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.12 |
| | | 4. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.15 |
| | | 5. | உள்ளக கணக்காய்வு | 2.8 |
| | | 6. | மனிதவள முகாமைத்துவம் | 2.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | முகாமைத்துவ நலிவுகள் | 2.9 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1.<br>2. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை.<br>சீராக்கப்பட வேண்டிய மீதிகள் | 2.14<br>2.13 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் | 1. | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதிலான குறைபாடுகள் | 2.4(ஆ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 2. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடல். | 2.11 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 2. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| | | 3. | ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.10(அ) |
| 128(1)(ஒ) | செலவிடப்பட்ட ஏதேனும் செலவினமொன்று அல்லது பொறுப்பொன்று கடப்பாடொன்றாக இருந்த போதிலும், தமது செலவின விடயப் பரப்பு அல்லது எல்லைகள் அல்லது ஏனைய அதிகார வழங்கப்பட்ட நிதிஏற்பாடு ஒன்றிற்குள் வருமாறும் அது போதியளவு அதிகாரம் பெற்றுள்ளதெனவும் | | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் | 2.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஞ) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும் | | குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.17 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | 1. | சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் | 2.4(ஈ) |
| | | 2. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.7 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை கொண்ட இணைப்பு வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

(ஆ) சமூக நலன்புரி மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சமூக பாதுகாப்பினை ஏற்படுத்தல்.

(இ) மக்களின் தேவையின் அடிப்படையாக அமைந்த உட்கட்டமைப்பு வசதிகளின் கட்டமைப்பொன்று

(ஈ) வினைத்திறனான மற்றும் விளைதிறனான மாவட்ட நிர்வாக முறைமையொன்று.

**2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்**

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|
| கொழும்பு பிரதேச செயலகம்<br>ஹோமாகம பிரதேச செயலகம்<br>மஹரகம பிரதேச செயலகம்<br>கடுவல பிரதேச செயலகம்<br>சீதாவக்க பிரதேச செயலகம்<br>பாதுக்க பிரதேச செயலகம்<br>ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகம்<br>தெஹிவளை பிரதேச செயலகம்<br>மொரட்டுவ பிரதேச செயலகம்<br>திம்பரிகஸ்யாய பிரதேச செயலகம்<br>ரத்மலான பிரதேச செயலகம்<br>கொலன்னாவ பிரதேச செயலகம்<br>கெஸ்பேவ பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களை தோற்றுவிப்பதற்கான அதிகாரச்சட்டம் | மக்கள் சேவைகளை நிறைவேற்றுதல் |

**2.3 செயலாற்றல்**

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான கொழும்பு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 10 பிரதேச செயலகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்குரியதாக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகம் ஆகியவற்றின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக கணக்காய்வு திட்டம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை பரீட்சிக்கும் போது ஒன்றுக்கொன்று பொருந்தாத சந்தர்ப்பங்கள் நிலவின.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மாவட்ட செயலகத்தில் பயன்படுத்தப்படும் 09 வாகனங்களின் மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் வாகனத்திற்குரியதாக 2017 ஆம் ஆண்டினுள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோ மீட்டர்களின் எண்ணிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii). திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் வாகனப் பயன்பாட்டிற்குரிய தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). 12 பிரதேச செயலகங்களின் மீளாய்வாண்டின் இறுதியளவில் 23 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் 342,977 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 3,699,800 தொகையும், வாகனங்களை சேவைப்படுத்துவதற்காக ரூபா 984,567 தொகையும், வாகன பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 3,010,147 தொகையும், வாகனக் காப்பீட்டிற்காக ரூபா 1,130,924 தொகையும், ஏனைய செலவினங்களாக ரூபா 1,189,212 தொகையுமாக ரூபா 10,014,650 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) பொருள் பதிவேட்டு புத்தகங்களை பதிவேட்டிற்குட்படுத்தல் மற்றும் சமப்படுத்தல், பேணிச்செல்லல் மற்றும் வகைப்படுத்தலிலான குறைபாடுகள் காணக்கூடியதாக இருந்தது.

(ii) பிரதேச செயலகங்களில் ஒவ்வொரு பிரிவுகளுக்கான உப பொருட் பதிவேடுகளை பேணியிருக்கவில்லை.

(iii) பட்டியல் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிராத பொருட்கள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

### (இ) வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

மஹரகம பிரதேச செயலகத்தால் அதன் பழைய கட்டிடத்தினுடனான காணி முறையற்ற விதத்தில் மஹரகம கமநல சேவைகள் செயற்பாட்டுக் குழுவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) **கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான காணியொன்று உரிய முறையில் கையேற்கப்படாது மஹரகம பிரதேச செயலகத்தால் அந்த காணியில் புதிய பிரதேச செயலகத்தின் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**2.5 கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்**

03 செலவின விடயங்களுக்கு உரியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் அளவானது ரூபா 1,691,671 ஆக இருந்ததுடன், அதற்காகவுள்ள சேமிப்புக்களானது ரூபா 267,271 ஆனமையால், அதன் பொறுப்புகளை தீர்ப்பதற்கு சேமிப்புகள் போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**பெறுகைகள் வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகுதல்**

கொலன்னாவ, மஹரகம, ஹோமாகம மற்றும் பாதுக்க பிரதேச செயலகங்களின் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சில செயற்திட்டங்களுக்காக ஆக்கபூர்வமான போட்டித்தன்மையொன்று ஏற்படுவதற்கு போதியளவான விலை கோரல்கள் இல்லாதிருந்ததுடன், ஒரு விலைக்கோரல் மாத்திரம் கிடைத்துள்ள போது மீண்டும் அழைப்பு விடுக்காது அந்த வழங்குநருக்கு குறித்த செயற்திட்ட ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைகளை மேற்கொள்ளும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் 5.3.13 மற்றும் 6.3.3 வழிகாட்டிகளுக்கமைய செயற்பட்டிருக்கவில்லை.

(இ) சீதாவாக்க பிரதேச செயலகத்தால் பன்முகப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 03 செயற்திட்டங்களுக்குரிய அளவீட்டு அறிக்கைகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவு அறிக்கைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்படாதிருந்த போதிலும் அதற்குரியதாக ரூபா 3,459,587 தொகையான பணம் விடுவிக்கப்பட்டிருந்தது.

**2.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) 05 வருடங்களுக்கு குறைந்த தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாத ரூபா 630,901 பெறுமதியான 07 சம்பவங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 முதல் 113 வரையான ஏற்பாடுகளுக்கமைய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது கொழும்பு மாவட்ட செயலகம் தீப்பற்றிய சம்பவம் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் இது வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) நாரஹேன்பிட்டிய புதிய மாவட்ட செயலகக் கட்டிடம் 20 மாடிகளைன் கொண்ட அலுவலகக் கட்டிடத் தொகுதியாக நிர்மாணிப்பதற்கு 2001 ஒக்தோபர் 17 ஆந் திகதி ரூபா 1,400 மில்லியன் பெறுமதிக்கு பொறியியல பணிகள் தொடர்பான மத்திய உசாத்துணைப் பணியகம் (CECB) உடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டடிருந்தது. 17 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் I மற்றும் II ஆம் கட்டங்களில் நான்கு மாடிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. பின்னர் III ஆம் கட்டத்தின் கீழ் எஞ்சிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்காக ரூபா 3,461.5 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்த III ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணங்கள் மேற்கொள்ளல் மற்றுமொரு நிறுவனத்திற்கு ஒப்பநடைக்கப்பட்டிருந்தது. மதியுரை நிறுவனமாக பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகம் (CECB) நியமிக்கப்பட்டிருந்தது. அந்த மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கு மதியுரை நிறுவனத்தினால் சூழல் சார்பான கொள்கை மற்றும் பச்சைக் கொள்கை ஆகியன ஒன்றினைக்கப்பட்டமையால் மொத்தக் கிரயமானது ரூபா 428.79 மில்லியனால் அதிகரித்திருந்தது. எனினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அளவிடைப் பத்திரத்தினால் பச்சைக் கொள்கைக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 75 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது. I மற்றும் II ஆம் கட்டங்களில் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணங்களில் நுழைவுப் பிரதேசத்தில் (Lobby area) காணப்பட்ட சுவர்களுக்கான சலவைக் கற்கள் (Wall Tile) மற்றும் தரையில் பதிப்பதற்கான சலவைக் கற்கள் (Floor Tile) அகற்றப்பட்டு மீண்டும் நிர்மாணிப்பதற்காக III ஆம் கட்டத்தின் கீழ் ரூபா 8,814,650 தொகையான விளைவற்ற கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனமானது பென்ரிக்வத்த பிரதேசத்தின் மத்திய அவதானங்களுடன் பிரதேசமொன்றாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சீதாவாக்க பிரதேச செயலகத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட கொடஹெர குன்று மண்சரிவு ஏற்பட்டமை காரணமாக இடம் பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப நடைமுறைகளினூடாக முன்வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அல்லது புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், உருவாக்கப்பட்ட பின்னர் மண்சரிவு அகற்றுதலொன்று ஏற்பட்டிருந்தது. இந்த தீர்மானம் காரணமாக மண்சரிவுக்குள்ளான பகுதியின் அச்சுறுத்தலினை குறைப்பதற்காக மண் நிலையான தன்மையை ஏற்படுத்துவதற்காக தற்போது தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் ரூபா 59,389,187 தொகையான மேலதிக கிரயமொன்றை மேற்கொண்டிருந்தது. அவ்வாறே தற்போது அந்த வீடமைப்பு செயற்திட்டத்தில் குடிப்பறியுள்ள 37 குடுபங்கள் முதல் 101 குடும்பங்களின் மக்களின் உயிர்களுக்கு ஆபத்தொன்று ஏற்பட்டிருந்தது. மலையினுள் உள்ள நீரினை செயற்கை முறையில் நீக்குவதன் மூலம் இயற்கையான சூழல் சமநிலத்தன்மைக்கு சேதம் ஏற்படுதல் போன்று தற்போது அங்கு குடியேறியுள்ள மக்கள் குடிநீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்திருந்தனர்.

**2.9 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதுக்க பிரதேச செயலகப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களில் காடழிப்பு செய்து மற்றும் பாதுகாக்கப்பட்ட கால்வாய்களின் கரைகளை குவித்து அத்துமீறிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன், பாதுகாக்கப்பட்ட வனங்களாக தொடர்ந்தும் பேணிச் செல்ல முடியாத காணித்துண்டுகளை சட்டரீதியாக ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோமாகம பிரதேச செயலகத்தினால் ஹோமாகம பிரதேச செயலகத்திற்கு 2011 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 217,739 ஆக இருந்தது.

(இ) காணிகளின் உரித்தினை பதிவு செய்யும் தேசிய நிகழ்ச்சசித்திட்டத்தின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் மாதிரி இலக்கம் பீ.எஸ்/01/2011 இன் கீழ் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பல்வேறு பிம்சவிய விண்ணப்பங்கள் மஹரகம பிரதேச செயலகத்தினால் கைதவிர்ப்பு செய்யும் நோக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சீதாவாக்க மற்றும் பாதுக்க பிரதேச செயலகம் ஆகிய இரண்டிலும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் சிவில் ஓய்வூதியம் ஆகியவற்றை செலுத்தும் போது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள பணத்தில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 4.50 மில்லியன் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

(உ) சிவில் ஓய்வூதியம் ரூபா 1.7 மில்லியனால் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் ரூபா 1.34 மில்லியன் படியாக ரூபா 2.61 மில்லியன் கூட்டுத்தொகை பாதுக்க பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியதாரர்கள் மரணமடைந்த பின்னரும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பணத்தை மீள அறிவிடுவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 ஆம் ஆண்டின் போது சிரேஷ்ட பிரஜைகளுக்காக செலுத்தப்படும் ரூபா 365.49 மில்லியனான வயோதிப படிகள் 13 பிரதேச செயலகங்களினாலும் தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அவற்றுள் ரூபா 16.48 மில்லியன் தொகை செலுத்தப்படாது எஞ்சியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பணம் பெற்றுக்கொள்ளாத நலனாளிகளை தேடிக் கண்டறிந்து நலன்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சில வருடங்களாக மானியங்களை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடுத்து காத்திருப்போர் பட்டியலிலுள்ள குறைந்த வருமானம் பெறுவோருக்கு படிகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏறபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 616.34 | 615.36 | 0.98 | 0.16 |
| | மூலதனம் | 230.25 | 228.44 | 1.81 | 0.08 |
| | **மொத்தம்** | **846.59** | **843.80** | **2.79** | **0.33** |
| **2014** | மீண்டுவருபவை | 559.10 | 540.80 | 18.30 | 3.22 |
| | மூலதனம் | 419.55 | 245.75 | 173.80 | 41.43 |
| | **மொத்தம்** | **978.65** | **786.55** | **192.10** | **19.61** |
| **2015** | மீண்டுவருபவை | 688.70 | 678.72 | 9.98 | 1.45 |
| | மூலதனம் | 824.80 | 602.54 | 222.26 | 26.95 |
| | **மொத்தம்** | **1,513.50** | **1,281.26** | **232.24** | **15.34** |
| **2016** | மீண்டுவருபவை | 738.00 | 722.42 | 15.58 | 2.11 |
| | மூலதனம் | 954.00 | 635.79 | 318.21 | 33.36 |
| | **மொத்தம்** | **1,692.00** | **1,358.21** | **333.79** | **19.73** |
| **2017** | மீண்டுவருபவை | 742.60 | 731.61 | 10.99 | 1.48 |
| | மூலதனம் | 1,110.20 | 1,098.98 | 11.22 | 1.01 |
| | **மொத்தம்** | **1,852.80** | **1,830.59** | **22.21** | **1.20** |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) பாதீட்டு முரண்**

(i). 10 செலவின விடயங்களுக்காக ரூபா 4,926,796 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii). அரச மொழிகள் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்றகாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 650,000 செலவு மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

29 ஏனைய அமைச்சுக்கள், 13 திணைக்களங்கள் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 4,150.32 மில்லியன், ரூபா 946.86 மில்லியன் எனுமாறு ரூபா 5,097.18 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி மாவட்ட செயலகத்திற்கு போதிலும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் ரூபா 4,336.76 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 760.42 மில்லியன் அல்லது 15 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 25501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 68.20 | 67.95 | 37.00 | 42.80 | 220.00 | 174.25 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 3,797,344 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதியானது 01 முதல் 22 வருடங்கள் வரையான வீச்சில் முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

## 2.12 கட்டுநிதிக் கணக்கு

சீதாவாக்க பிரதேச செயலகத்தில் 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட 18 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 12.69 மில்லியன் தொகை கட்டுநிதி இல்லாதிருந்தமையின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.13 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்

### சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதிகள்

சீதாவாக்க, கடுவல மற்றும் மஹரகம பிரதான செயலகங்களை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 03 வங்கிக் கணக்குகளுக்குரிய 2018 யூலை மாதத்தின் வங்கி இனக்கக்கூற்றுக்களை பரீட்சிக்கும் போது வழங்கிய போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 434,968 பெறுமதியான 6 மாதங்களை கடந்த 37 காசோலைகள் தொடர்பில் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 396(ஈ) ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.14 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்ட செயலகத்தினால் கீழ் காணப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கொழும்பு மாவட்டச் செயலகம், சீதாவாக்க மற்றும் தெஹிவல பிரசேத செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.15 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தமது திணைக்களங்களில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களங்களில் உள்ளக கணக்காய்வு அலகுகள் தாபிக்கப்பட வேண்டுமென்பது நிதிப்பிரமாணம் 133 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மாவட்ட செயலகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலகம் மற்றும்

பிரதேச செயலகம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக மீளாய்வாண்டிற்குரியதாக போதியளவான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.16 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 38 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 31,367 ஆக இருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 52 | 45 | 07 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 33 | 18 | 15 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1196 | 1044 | 153 | 01 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 143 | 124 | 20 | 01 |
| | **மொத்தம்** | 1424 | 1231 | 195 | 02 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தேவைப்பாட்டினை மிகைத்து பதவிநிலையை அங்கீகரித்துக்கொள்ளல்

மீளாய்வாண்டின் இறுதியளவில் 195 வெற்றிடங்கள் நிலவிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தமையால் அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியிலான வெற்றிடங்கள் நிலவியமை தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மிகை மதிப்பீட்டிற்கு உள்ளாகியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) அங்கீகரித்த பதவியணியை மிகைத்து ஆட்சேர்த்தல்

முறையான அங்கீகாரமொன்று இல்லாது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 02 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

### (இ) பதவியணியை பயிற்றுவித்தல்

மாவட்ட செயலகங்கள் மற்றும் 13 பிரதேச செயலகங்களுக்குரிய மொத்த உள்ளபடியான எண்ணிக்கையிலான 1231 பேரில் 2017 ஆம் ஆண்டில் பயிற்சிகளை பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 854 மாத்திரமாகும். 377 உத்தியோகத்தர்கள் எந்த விதமான பயிற்சியையும் பெற்றிருக்கவில்லை.

## 2.17 அரசாங்க உத்தியோகத்தர் பிணை வைத்தல்

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 891(I) இன் ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்கத் தேவையான அணைத்து உத்தியோகத்தர்களினதும் பெயர்களடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன், அது தொடர்பில் 891(II) (III) மற்றும் (IV) ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 892 இன் ஏற்பாடுகளுக்கமைய பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் திருத்தப்பட்ட அறிக்கையொன்று ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் இறுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 891(IV) இன் பிரகாரம் பிணை வைத்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் மற்றுமொரு திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று செல்லும் போது உத்தியோகத்தரின் பிணை வைப்புகள் தொடர்பான விபரங்கள் மற்றும் வைப்புப் புத்தகம் அனுபப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைத்த உத்தியோகத்தர்களின் வங்கிப் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிணைகள் கட்டளைச் சட்டத்தின் மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய மாவட்ட நிர்வாக சுற்றறிக்கையின் 1/99 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய சாரதிகள் பிணை வைக்க வேண்டிய சாரதிகள் பிணை வைக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.